1971 ஜூலை 19]

Sri Chandra Choodeswara Temple at Hosur

* 317. *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether any representation has been received recently from the trustees of Sri Chandra Choodeswara Temple of Hosur in Dharmapuri district to lay a road to the hill temple of Sri Chandra Choodeswara; and

(b) if so, the estimated cost of the same and when it will be sanctioned?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) இந்த வேலையின் மதிப்பீடு ஒரு லட்சம் ரூபாய். இந்த மதிப்பீட்டுக்கு விரைவில் ஒப்புதல் வழங்க, இந்து சமய அறநிலைய ஆணையாளர் நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளார்.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister whether any representation has been received requesting sanction for renovation of the gopuram of Sri Chandrachoodeswara temple? If so, what is the action taken by this Government?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அங்கே ஒரு இலட்சம் ரூபாய் செலவில் ரோடு போடுகின்ற வேலைக்கான மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட வேண்டுமென்றுதான் வந்திருக்கிறது. கோபுர வேலை பற்றி எதுவும் வந்ததாக அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister when the amount will be sanctioned for laying of roads?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: 26—9—1970-ம் தேதி அன்று அங்கிருக்கும் அறங்காவலர்களிடமிருந்து ஆணையருக்கு கோரிக்கை வந்தது. 29—6—71-ம் தேதியன்று மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் ரோடு போடும் இடத்திற்குச் சென்று பார்வையிட்டு வந்துள்ளார். வெகு விரைவில் ஒப்புதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

ரேயான் நூல் விலையேற்றமும், கைத்தறி விசைத்தறி நெசவாளர் அல்லலும்.

திரு. கி. ஜெயராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, "காப்புவரி ஆணைக் குழுவின் அறிக்கையை (Tariff Commission) அமுல்படுத்தாமல் தாமதம் செய்யும் மத்திய

அரசினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள (Voluntary Distribution (Scheme) தன்னிச்சை விநியோகத் திட்டத்தால் நார்ப்பட்டு நூல் (Rayan yarn) விலை மிகவும் அதிகமாகி தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர்களும் விசைத்தறியாளர்களும் பல்வேறு கஷ்டங்களுக்குள்ளாகியிருப்பதால், இத் திட்டத்தைக் கைவிட்டு விலையைக் குறைக்கவும் சீரான விநியோகம் செய்யவும் மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்த வேண்டும் என்பது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்."

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இம் மாநிலத்திலும் கைத்தறித் தொழிலுக்குத் தேவைப்படும் ரேயான் நூல் ஆண்டு ஒன்றுக்கு 120 லட்சம் கிலோ கிராம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் மேற்படி நூலைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஒரே ஆலையான கோயம்புத்தூர், "தென் இந்திய விஸ்கோஸ் இந்தியா லிமிடெட்" ஆண்டு உற்பத்தி சுமார் 34 லட்சம் கிலோ கிராம் மட்டுமேயாகும். எனவே, தமிழ்நாடு செயற்கைப்பட்டு நூல் உற்பத்தியைப் பொறுத்த வரையில் பற்றாக்குறை மாநிலமாக உள்ளது. மேலும், துய்ப்போர் ஏனைய மாநிலங்களிலுள்ள நூற்பு ஆலைகளையும், இறக்குமதியையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்த நாட்டில் ரேயான் நூல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஆலைகள் பின்வருமாறு :

1. நேஷனல் ரேயான் கார்ப்பரேஷன் லிமிடெட், பம்பாய்.

2. சென்சுரி ரேயான், பம்பாய்.

3. பரோடா ரேயான் கார்ப்பரேஷன் லிமிடெட், சூரத் (குஜராத் மாநிலம்).

4. இந்தியன் ரேயான் கார்ப்பரேஷன் லிமிடெட், வீராலால் சாலை, வீராலால் (குஜராத் மாநிலம்).

5. சௌத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

6. திருவாங்கூர் ரேயான் லிமிடெட், கேரளா.

7. ஜே. கே. ரேயான், கான்பூர்.

8. கேசாராம் ரேயான், கல்கத்தா.

ரேயான் நூல் விலைகளிலும், பகிர்ந்தளிப்பதிலும் சட்டப்படிக்கான கட்டுப்பாடு எதுமில்லை. நூற்பவர்களும், உண்மையில் பயன்படுத்துபவர்களும், இந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மொத்த உற்பத்தியில் 52½ சதவீதம் வரை தாமே முன்வந்து நியாயமான விலையில் பகிர்ந்தளிக்க ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டுள்ளனர். 1—1—1971 முதல் 31—12—1971 வரை ஓராண்டுக் காலத்திற்குள் இந்த ஒப்பந்தம் செயலில் இருக்கும்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், இந்த மாநிலத்திலுள்ள ரேயான் நூல் உண்மையில் பயன்படுத்துபவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதை சேலத்தில் அரசு சார்பிலே வட்டாரக் குழு ஒன்று கவனிக்கிறது. இதைத் தவிர, லிங்கோஸ் இழைத் துணி ஏற்றுமதி செய்வதால் ஏற்படும் குறைவை நிறைவு செய்வதற்காக நூற்பவர் ஒவ்வொருவரும்தான் உற்பத்தி செய்கிற நூலில் முதல்தரமான 10 சதவீத நூலை ஒதுக்கி வைக்க வேண்டும். நூற்போர் உற்பத்தியில் எஞ்சியவற்றை வெளிச்சந்தையில் விற்கலாம்.

எனவே, செயற்கைப் பட்டு நூலின் ஒரு பகுதி தேவை மட்டுமே வரையறுக்கப்பட்ட விலைகளில் கிடைக்கிறது என்பது இதனால் தெரியவரும். இந்தத் தன்னிர்சை விநியோகத் திட்டம், கூட பகிர்ந்தளிப்பதிலுள்ள குறைபாடுகளின் காரணமாக, நியாய விலைகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவு நூலை வழங்க இயலவில்லை. இதனால், உண்மையில் ரேயான் நூலைப் பயன் படுத்துபவர்கள் தங்களது பெருமளவு நூல் தேவைகளுக்காக வெளிச் சந்தைக்குச் சென்று அதிக விலையில் நூல் பெற வேண்டியதாயுள்ளது. செயற்கைப் பட்டு நூலின் பகிர்ந்து அளிப்பையும் விலையையும் கட்டுப்படுத்த மாநிலத்திற்குச் சட்டப் படிக்கான அதிகாரங்களை இந்திய அரசு கொடுத்தாலொழிய இதற்கு நிலையான தீர்வு காண்பது இயலாததாகும். கைத்தறி நெசவாளர்கள் தங்களது முழுத் தேவைகளுக்கும் போதுமான அளவு நூலை வெளிச் சந்தையில் பெற வகை செய்வதற்காக, அரசு வணிகக் கழகம் கூப்ராமோனியம் செயற்கைப்பட்டு நூலை இறக்குமதி செய்து அதைப் போதுமான அளவு வெளிச் சந்தையில் கிடைக்கச் செய்ய அதற்கு அனுமதி வழங்க வேண்டுமென இந்திய அரசை நமது அரசு எழுதிக் கேட்டுக்கொண்டுள்ளது.

திரு. கி. ஜெயராமன் : நார்ப்பட்டை விநியோகிக்கும் பொறுப்பு தனிப்பட்ட குழுவுக்கு இருப்பதை மாற்றி மாநில அரசு இயக்குநர் அவர்கள் சிபார்சின்படி உபயோகிப்போருக்கு மட்டுமே விநியோகிக்கும் வகையில் மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நல்ல யோசனை. இந்த யோசனையை அரசு ஏற்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறது.

3. அறிக்கை அளித்தல்

நெடுஞ்சாலைகள் பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை மீதான அறிக்கை

THIRU K. VEZHAVENDAN : Mr. Speaker, Sir, I rise to present the First Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Highways and Rural Works.